**சூரியவெவ பிரதேச சபை - 2021**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

சூரியவெவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சூரியவெவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 06 நிர்மாணவேலை செயற்திட்டங்களுக்கு உரிய மூலதனப்படுத்த வேண்டிய பெறுமதி ரூபா 13,670,989 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வேன். | மூலதனச் செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்கு புறம்பான ஊழியர்களின் பேரில் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ஊழியர் பிணை வைப்புக்கள் ரூபா 1,331,547 தொகை ஒவ்வொரு உத்தியோகத்தர்களதும் சொத்துக்கள் என காணப்பட்ட போதிலும் சபையினால் செலுத்த வேண்டிய பொறுப்பொன்று மற்றும் முதலீடு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மாகாண வருமானத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டு இருந்த, வருமானம் என சபைக்கு வழங்கப்படமாட்டாது என்று அறுதியாக அறிவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 895,622 தொகை பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண மீதி என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறை சொத்துக்கள் அப் பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வேன். | நடைமுறைச் சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான கப் வண்டி ஒன்றை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்திருந்த ரூபா 835,000 இற்கான வருமானம் மூலதனச் சொத்துக்கள் விற்பனையின் கீழ் கணக்கீடு செய்யாமல் மூலதன உதவி வருமானப் பெறுவனவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் நடவடிக்கை எடுப்பேன். | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது உள்நாட்டுக் கடன் நிதியத்திற்கு செலுத்தப்பட்டு இருந்த ரூபா 2,200,309 இற்கான கடன்தவணை மற்றும் ரூபா 15,385 இற்கான வட்டி கொடுப்பனவு நிதிச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்படாமல் மூலதன செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்பு கணக்கிற்கான வட்டி ரூபா 572,912 தொகை எனினும் அதனை ரூபா 499,133 | எதிர்காலத்தில் காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 73,779 தொகை குறைவாக முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | | |
| (எ) | ஷமல் ராஜபக்ஷ சிறுவர் பூங்காவின் பழைய உபகரணங்களை கழற்றி அகற்றும் நிர்மாண வேலைக்காக பெற வேண்டிய மூலதன உதவி ரூபா 3,161,592 தொகை எனினும் அதனை ரூபா 2,736,400 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் பெற வேண்டிய மூலதன உதவி ரூபா 425,192 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | | பெற வேண்டிய மூலதன உதவி சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது 05 மயானங்களின் எல்லை வேலிகள் பராமரிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 275,735 தொகை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அடுத்த ஆண்டுகளில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வேன். | வருவாய் செலவு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த 03 செயற்திட்டங்கள் தொடர்பாக கடன்கொடுத்தோர் ஏற்பாட்டு ஒதுக்கம் ரூபா 233,519 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | கடன்கொடுத்தோர் ஏற்பாட்டு ஒதுக்கம் சரியாக செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 17,815,568 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 21,130,642 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வாடகை** | | |
| i. | மீளாய்வாண்டிற்கான 60 கடையறைகளில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 941,485 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடை வாடகைத் தொகையில் ரூபா 379,990 தொகை பதிவழிப்பதற்காக ஆளுனரிடம் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது எனவும் மீதி நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| ii. | மீளாய்வாண்டிற்காக 11 குத்தகை ஆதனங்களில் இருந்து பெற வேண்டிய ரூபா 5,087,902 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நிலுவைத் தொகையில் 2018 ஆண்டிற்குரிய சூரிவெவ வாராந்த சந்தையின் வாகனத் தரிப்பிடம் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 23,415 தொகை காணப்பட்டது. | ரூபா 3,366,428 தொகையை பதிவழிப்பதற்காக ஆளுனருக்கு சமர்ப்பிக்கப்பட்டது எனவும், ரூபா 23,415 தொகை அறவீடு செய்வதற்காக இணக்க சபைக்கு மற்றும் மீதி குத்தகைகாரர்களின் பாதுகாப்பு பிணைத் தொகையில் இருந்து எதிரீடு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| iii. | சபைக்குச் சொந்தமான இயந்திர உபகரணங்கள் 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு கொடுத்ததன் மூலம் பெற வேண்டிய ரூபா 485,500 தொகையினை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை விரைவாக அனுப்புமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| | மீளாய்வாண்டிற்காக 53 அறிவித்தல் பலகைகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 1,352,675 இற்கான அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 8,375 தொகை அறவீடு செய்வதற்காக இணக்க சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது எனவும் மீதி நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2015, 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த முறையே இலக்கம் 02 , 06, 01 தொகை மற்றும் 13 தொகை என மொத்தம் 22 அலகுகள் அங்கீகாரமற்ற நிர்மாணவேலைகள் தொடர்பாக பிரதேச சபைச் சட்டத்தின் 52 ஆவது பிரிவின் பிரகாரம் சபை முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அங்கீகாரமற்ற நிர்மாணவேலைகளை தவிர்ப்பதற்காக பொது மக்களை இது தொடர்பாக அறிவூட்டி நிர்மாணவேலைகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |